
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் 2 | மே 1989 | இதழ் 5


பரிசுத்த



வேதாகமம்


வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க் கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்,

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002.

நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00 சகோதரிகள் ஐக்கிய கூட்டம்(ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே...


1. பெற்றோர்களே, உஷார்! 1
2. தந்தை மகன் உறவின் சிறப்பு 5
3. பரிசுத்த ஆவி 9
4. கிறிஸ்தவர்கள் 15
5. முதல் நூற்றுண்டுத் திருச்சபை 27

# THIRUMARAI AASAAN



Editor: E. Z. SELVANAYAGAM

Honorary Editor: J. C. CHOATE



**Published by Church of Christ**

**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. May 1989 Issue 5


**ஆசிரியவுரை**

# பெற்றோர்களே, உஷார்!

தாவீது அரசனை அறியாத கிறிஸ்தவர்கள் இருக்கமுடியாது. தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த தாலந்துகள் ஏராளம்.

அவன் அழகான தோற்றமுடையவன் 1 சாமு 16:12. இசைக் கருவிகள் இயக்குவதில் வல்லவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சவுந்திரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றெல்லாம் அவனைப்பற்றி மக்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர் 1 சாமு 16:18. அதிலே உண்மையில்லாமல் இல்லை.

கொடிய, பலமுள்ள மிருகங்களோடே போராடி வென்றிருக்கிறான் 1சாமு 17, 34, 35. இலக்கிய அறிவுள்ளவன், கவிஞன், பாடகன். சங்கீதங்களில் பெரும் பகுதி அவரால் இயற்றப்பட்டது என்பதை நாம் அறிவோம். அவைகள் பொருள் ஆழமும், கேட்போர் உள்ளத்தைத் தொடுவதுமாக இருக்கிறதை ருசித்துப்பார்த்தவர்கள் ஒத்துக் கொள்கின்றனர். தேவன்மேல் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் '(1சாமு 17:37)' நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடயத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்திக்கிற இஸ்ரவேலருடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என்கையில் ஒப்புக் கொடுப்பார்' (1 சாமு 17:46). போன்ற அவனுடைய நம்பிக்கை நிரம்பிய பேச்சுகளும், செயல்களும் அவனுக்கு தேவன் மேலிருந்த விசுவாசத்தைக் காட்டுகிறது.

பக்தி விஷயத்திலும் அவன் சிறந்தவனே 'வேதத்தை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்' என்று சொன்னவன் (சங் 1:1) 'ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபொழுது மகிழ்ச்சியாய் இருந்தேன் என்றும் கூறுகிறான் (சங் 122:1). இன்னும் எத்தனை எத்தனையோ வசனங்கள் சங்கீத

புஸ்தகத்தில் அவனுடைய தேவ பக்திக்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன. மேலும் அவன் தன்னுடைய தவறுகளை தேவ மனுஷன் சுட்டிக்காட்டின பொழுது, உள்ளமுடைந்து கதறினான் (சங் 51). அவன் பாவத்திற்காக மெய்மனஸ்தாபப்பட்டு தேவ இரக்கத்தைப் பெற்றான் அதனாலே தான் வைத்தியர் லூக்கா தேவன் தன் இதயத்துக் கேற்றவனாகக் கண்டேன் என்று தேவன் சாட்சி கொடுத்ததாக எழுது கிறார் (அப் 13:22).

இவ்வளவு தாலந்துகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுப் பேரும் புகழுமாய் வாழ்ந்த இந்த மனுஷனுடைய குடும்ப வாழ்க்கையும், அவனுடைய பிள்ளை வளர்ப்பு முறைகளும் மிகவும் கண்டனத்துக்குரியதாக இருக்கிறது என்பதை நினைக்கும்போது மிகுந்த வருத்தம் உண்டாகிறது. தேவ சித்தத்துக்கு விரோதமான எந்தப் பாவமும் அதற்குரிய விளைவுகளைச் சிறிதளவாவது நம்முடைய வாழ்க்கையில் பதிப்பிக்காமல் போகாது. ஒருவன் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், தேவ கிருபையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தாலும் பாவத்திற்குரிய விலையைக் கொடுத்தே தீரவேண்டும்; தேவன் பட்சபாதகமுள்ளவர் அல்ல என்பதை தாவீதின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தால் எளிதில் விளங்கிக் கொள்ளலாம் பலதார முறை அக்காலத்தில் ஒரு பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை என்றாலும் அது தேவனுடைய தீர்மானத்துக்கு விரோதமானதே அவனுடைய மனைவி மார்களின் சண்டைகள், மனஸ்தாபங்களைப் பற்றி வேதாகமம் விவரித்துச் சொல்லவில்லையென்றாலும் அவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வு உள்ளவர்களாக இருந்ததை வைத்துப் பார்க்கும்போது நிச்சயமாக அவர்களுடைய தாய்மார்களின் மனப்போக்கு அவர்களுடைய பகைமையை வளர்வதற்குக் காரணங்களாக இருந்திருக்கும் என்று எவரும் ஊகிக்கலாம் போதாதற்கு தாவீது தன்னுடைய பிள்ளைகளுடைய தவறுகளைக் கடிந்துகொள்ளாமல் தங்கள் இஷ்டத்துக்கு வளரும்படி விட்டுவிட்டான் என்று தோன்றுகிறது. (1 ராஜா 1:6).

பிள்ளைகள், வேலிமுள் அல்ல—அவர்கள் வேப்பங்கன்றுகள். அவர்கள் வளரக்கூடாது,—அவர்கள் வளர்க்கப்பட வேண்டும் என்று அனுபவஸ்தர் ஒருவர் கூறினார். வேதாகமமும் கூட பிள்ளை வளர்ப்பைப் பற்றி மௌனமாக இருக்கவில்லை. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியில் அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி 22:6 ) பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே 6:4) என்று ஆலோசனை கூறுகிறது.

இவைகளையெல்லாம் தாவீது போன்ற மனிதர்கள் கூட அசட்டை செய்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்றைக்கும் கூட அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செல்லம் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு பிள்ளைகளுடைய தவறுகளைக் கண்டிக்காதது மட்டுமல்ல அதைப் பார்த்து ருசித்து மகிழவும் செய்கிறார்கள். பெற்றோர்களே அதற்காக தாவீது கொடுத்த விலை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

தாவீது மூத்த மகன் அம்னோன். இவன் தாவீதுக்கு ஆகினோம் என்னும் ஸ்திரீயின் வழியாய்ப் பிறந்தவன் (2 ராஜா 3:2) தாவீதுக்கு மாக்காள் என்னும் வேறொரு மனைவியின் மூலமாக ஒரு பெண்பிள்ளை இருந்தாள்: அவள் பெயர் தாமார். அவள் நல்ல அழகி இந்த அம்னோன் என்பவன் அந்தப் பெண்மீது சகோதரி என்றும் பாராமல் மோகம் கொண்டு கெடுத்துப் போட்டான் (2 சாமு 13:1-22). இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட அவளுடைய அண்ணன் அப்சலோம் என்பவன் சுமார் இரண்டு ஆண்டுகளாக வன்மம் வைத்துக் கொண்டிருந்து அம்னோனை ஒரு நாளில் விருந்துக்கு அழைத்து அடித்துக் கொன்று போட்டு. தன் தாய் பிறந்த கேசூருக்கு ஓடிப்போனான் (2 சாமு 13:22-38).

இவைகள் எல்லாம் ஒரு வேளை தாவீது அந்நாட்களில் செய்த அக்கிரமச் செய்கைகளின் விளைவா? வேறொருவனின் மனைவியாகிய பெத்சேபாள் மீது மோகங்கொண்டு அவளைத் தொட்டதற்கு தேவன் கொடுத்த தண்டனையா? (2 சாமு 11:4) அப்சலோமை தன் சகோதரனை சதி செய்து கொன்றதற்கு தாவீது, நாட்டுப்பற்று மிகுந்த போர் வீரன் உரியாவை தன் வசப்படுத்த முடியாததால் அவனைத் தீர்த்துக் கட்டுவதற்குச் செய்த சதியின் பிரதிபலிப்பா? (2 சாமு 11:14-25)

அப்சலோம் அதோடு நிற்காமல் தன் தகப்பனுக்கு விரோதமாய் கலகம் செய்து தானே ராஜா என்று பிரகடனம் செய்து கொண்டு தகப்பனாரை நாட்டை விட்டே துரத்திவிட்டான். அந்த நிகழ்ச்சியை 'தாவீது தன் முகத்தை மூடி வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவ மலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள்' என்று வேதாகமம் விவரிக்கிறது (2 சாமு 15-30) பின்னர் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, ராஜ்ஜியத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். ஆனால் தான் அருமையாய் நேசித்த மகன் அப்சலோமை இழந்தான்.
இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, நீதி உறங்கவில்லை என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. நிரபராதியாகிய ஊரியாவை சதிசெய்து கொன்று அவனுடைய மனைவியை எடுத்துக்கொண்டதற்காக நாத்தான் தீர்க்கதரிசி மூலமாக தேவன் கொடுத்த சாபம் என்ன? 'பட்டயம் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்' 2 சாமு 12:10. பெற்றோர்களே, உங்கள் குடும்பத்தில் சமாதானமும், மகிழ்ச்சியும், உங்கள் பிள்ளைகளிடத்தில் சகோதரபாசமும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா? அது நல்லது தான். தேவனுக்குப் பயந்து பாவத்துக்கு விலகி நீதியை நடப்பியுங்கள். அநியாயத்தை விதைத்து விட்டு பாவத்தை அறுவடை செய்யமாட்டோம் என்பது எந்த வகை நியாயம்?

தாவீதின் இன்னொரு மகன் பெயர் அதோனியா. இவன் ஆகீத் என்னும் ஸ்திரீயின் வழியாகப் பிறந்தவன். (1நாளா 3:1-7) அப்சலோமின் மரணத்துக்குப் பிறகு தானே பட்டத்துக்கு உரிய இளவரசன் என்ற நினைப்பில் மிதந்துகொண்டு பல காரியங்களைச் செய்துவந்தான். தாவீது அதைக் கண்டுகொள்ளவில்லை (1 ராஜா 1:5-7) அவன் செய்து வந்த காரியங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் ராஜாவிடத்திலிருந்து வரவில்லை என்று மக்களும் அதிகாரிகளும் கண்டபொழுது அவனைச் சார்ந்து நின்றார்கள். சமயம் வந்தபோது அவன் தன்னை ராஜா என்றே

பிரகடனப்படுத்திவிட்டான் என்று தெரிகிறது (I ராஜா 1:25) இத்தனை காரியங்களும் நடந்த பிறகு பெத்சேபாளும் நாத்தான் தீர்க்கதரிசியும் போய் ஞாபகப்படுத்தின பிறகு சாலமோனை ராஜாவாக ஏற்படுத்த உத்தரவிடுகிறார். பல மனைவிகள், பல இளவரசர்கள் இருக்கும்போது (I நாளா 3:1-7) இன்னார் தான் பட்டத்துக்குரியவர் என்று திட்டவட்டமாக அறிவித்து இருக்கவேண்டும். அப்படி அறிவித்தால் பிரச்சனைகள் உருவாகலாம் என்ற நிலை இருந்திருந்தால் அதை மிக முக்கியமானவர்களிடமாவது இரகசியமாகச் சொல்லி வைத்து மற்ற எவரும் ராஜாவின் எண்ணத்துக்கு மாறாக செயல்படாதபடி கண்காணித்திருக்க வேண்டுமல்லவா?

ஒரு சாம்ராஜ்யத்தை கட்டிக்காத்த தாவீதுக்குத் தன் குடும்பக் காரியங்களை முறைப்படுத்தாமற் போனதினால் ஏற்பட்ட குழப்பம் எவ்வளவு என்று பாருங்கள். அதோனியா தனக்கு ஏற்பட்ட மனக் கொதிப்பை அவனே வெளியிடுவதைக் கேளுங்கள். ''ராஜ்யம் என்னுடையதாயிருந்தது என்றும் நான் அரசாளுவதற்கு இஸ்ரவேலர் எல்லோரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்றும் நீவீர் அறிவீர்; ஆனாலும் ராஜ்ய பாரம் என்னைவிட்டுத் தாண்டி என் சகோதரனுக்கு ஆயிற்று என்கிறான்" (I ராஜா 2:75) சாலமோன் ராஜாவாக முடி சூடப்பட்டான் என்று கேள்விப்பட்டதும் அதோனியா தன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று அஞ்சினான் (I ராஜா 1:50) அவனுடைய பயத்துக்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. அவன் பயந்தபடியே ஒரு காரணம் கிடைத்ததும் சாலமோன் அவனைக் கொன்றுவிட்டான். (I ராஜா 2:25) இந்த அளவு குடும்பங்களில் வெட்டும் குத்தும், சர்வ சாதாரணமாகப் போனதுக்கு ஒரு வகையில் தாவீதின் மோசமான குடும்ப பரிபாலனம் தான் காரணம் என்று துணிந்து கூறலாம். இந்தப் பதவி போட்டியில் ஏற்பட்ட ரசாபாசங்கள் நமக்கு விரித்துச் சொல்லப்படவில்லை. ஆயினும் சகோதரர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு சாகிற அளவுக்கு அவர்கள் உள்ளம் கடினப்பட்டது எப்படி?

பெற்றோர்களே! சிந்தியுங்கள் (1) பல மனைவிகள் (2) தாவீதின் மோக இச்சையால் குற்றமற்ற இரத்தம் சிந்தப்பட்டது. (3) பிள்ளைகள் வளர்க்கப்பட்ட முறையில் குறைபாடு (4) தெளிவான தூரப் பார்வையின்மை ஆகியவைகளே நாம் பெரிதும் மதிக்கிற தாவீது அரசனின் குடும்ப சூழ்நிலையைக் கெடுத்துப்போட்டது.

நண்பர்களே! முறிந்த கை கூடலாம் ஆனால் முன்பு இருந்த வலுவும் பொலிவும் இருக்குமா? என்பது சந்தேகமே. பாவம் செய்தவன் மனங்கசிந்து கண்ணீரோடு தேவனிடத்தில் மன்றாடினால் மன்னிப்புக் கிடைக்கும் என்பது சரியே. ஆனால் அதன் விளைவுகளை சிறிதளவாவது அனுபவிக்காமல் தப்ப முடியாது. சிறுவயதிலிருந்தே பாவத்தை எல்லா ரூபத்திலும், நிலைகளிலும் எதிர்த்துப் போராடி தன்னுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொண்ட யோசேப்பையும், பல பாவங்களைச் செய்து பிறகு மனந்திரும்பிய தாவீதின் வாழ்க்கையையும் ஒப்பு நோக்கிப் பாருங்கள். தாவீது சிறுவயதிலே ராஜாவாக அபிஷேகம் பண்ணிட்டிருந்தாலும் அவனுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி சஞ்சலத்திலும், வேதனையிலும், போராட்டத்திலுமே கழிந்திருக்கிறது. ஆனால் யோசேப்பின் வாழ்க்கையோ தெளிந்த நீரோட்டம்; ஆசீர்வாதத்தின் ஊற்றுக்கண் நீங்கள் யாராக இருக்க விரும்புகிறீர்கள்?

— E. Z. செல்வநாயகம்

# தந்தை மகன் உறவின் சிறப்பு

தந்தை-மகன் உறவு மிகவும் நெருக்கமானது; உறுதியானது. தந்தை மக்களின் நலனில் மிக அக்கறை காட்டுவார். அவர் அவர்களை நேசிக்கிறபடியால் அவர்களுடைய ஒழுக்க நெறிகளை வளர்க்கக் கருதி சில வேளைகளில் கண்டிக்கவும் செய்வார். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பான ஈவுகளை அவர்களுக்குக் கொடுப்பார். ஆயினும் சிலவற்றை தர மறுத்து விடுவார். எனினும் பிள்ளைகள் அவர்மீது சலித்துக்கொள்ள மாட்டார்கள். மாறாக தந்தையை மிகவும் மதித்து அன்பு கூருவார்கள். தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் இருப்பார்கள். பெற்றோர்கள் தங்களைக் கண்டித்து திட்டுகிற அளவுக்கு அவர்கள் போகாமல் தகப்பனுடைய மனநிலையைப் புரிந்துகொண்டு தாங்களாகவே மனமுவந்து கீழ்ப்படிந்து நடப்பர்.

அடுத்த வேளைக்கான உணவைப் பற்றியோ, அவர்களுக்குத் தேவையான உடைகளைப் பற்றியோ, வீட்டு வாடகையைப் பற்றியோ பிள்ளைகளுக்கு கவலை கிடையாது. அவர்களுடைய எதிரிகளைப் பற்றிய பயமும் இருக்காது. ஏனெனில் அவர்களுடைய தகப்பனார் அவர்களுடைய கைகளைப் பிடித்து, தாங்கள் போக வேண்டிய இடத்திற்குப் பத்திரமாக அழைத்துச் செல்வார் என்றும், அவர்களுக்கு வேண்டியவைகளை வாங்கித் தருவார் என்றும், அவர் எதைச் செய்தாலும் தங்களுடைய நன்மைக்காகவே செய்வார் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு.

இதே போன்றுதான் பரலோகத்திலிருக்கிற தந்தையும், தம்முடைய மக்களாயிருக்கிற மானிடர் மீதும் அக்கறையுள்ளவராக இருக்கிறார். ஆகையால் அவர் தம்முடையவர்கள் மீது எப்படிப்பட்ட அன்பைச் செலுத்துகிறார் என்றும் அவர்களுடைய பிள்ளைகளாகிய நாம் எப்படிப்பட்ட அன்பும், கீழ்ப்படிதலுமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அவருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் எப்படிப்பட்ட அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் பார்ப்போம்.

1. தேவன் உலகத்திலுள்ள அனைத்து மக்களையும் நேசிக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். ஏனெனில் அவரே அனைத்து மக்களையும் படைத்துப் பராமரித்து வருகிறவர். மனிதன் பிசாசால் வஞ்சிக்கப்பட்டு பாவம் செய்து, தேவனுக்கு விரோதிகளாகிவிட்டபடியால் அவர்களை இரட்சித்துக் காப்பாற்றும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று யோவான் கூறுகிறார். (யோவான் 3:16,17) நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணு கிறார்'' என்று பவுலும் அதை ஆமோதிக்கிறார். (ரோமர் 5:8) மீண்டும் யோவான் தமது நிருபத்தில் ''அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" என்கிறார் (1 யோவான் 3:16) பவுலும் கலாத்தியர் நிருபத்தில் அதை மீண்டும் வலியுறுத்தி, 'கிறிஸ்து நமக்காக தன் ஜீவனைக் கொடுத்தார்' என்கிறார் (கலா 2:21)

2. தேவ அன்பு, கிறிஸ்து மூலமாய் நம்மை இரட்சித்து இருக்கிற படியால், நாம் அவருடைய மக்களாக மாறியிருக்கிறோம். இதைக் குறித்து யோவான், ''நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாததினால் நம்மையும் அறியவில்லை'' என்கிறார் 1 (யோவான் 3:1)

3. இதன் மூலம் தேவன் நம்முடைய பிதாவாகவும் நாம் அவருடைய பிள்ளைகளாகவும் இருக்கிறபடியால் நாம் அவரை நேசிப்பது அவசியமாகிறதன்றோ? நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்வீர்கள்'' என்று கிறிஸ்து தாமே கூறியிருக் கிறார் (யோவான் 14:15). மேலும் அவர் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்மாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக'' என்கிறார் (மத். 22:37) வேறொரு சமயத்தில் ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்று கூறு கிறார் (யோவான் 14:23).

4. நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறபடியால் அவர் நமக்காக கவலைப்படுகிறவராகவும், ஆசீர்வதிக்கிறவருமாயிருக்கிறார். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" என்கிறார். (எபே 1:3) அப்போஸ்தலன் யோவானும் கூட ''அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று பிரகடனம் செய்கிறார் (1 யோவான் 1:7) மேலும் அவர் கூறுவது ''அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியால் நாம் வேண்டிக் கொள்கிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம்" என் கிறார் (1யோவான் 3:22) தொடர்ந்து அவர் ''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுக் கிறாரென்பதே நாம் கொண்டிருக்கிற தைரியம்.

நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்று நாம் அறிந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று அறிந்திருக்கிறோம் (1யோவான் 5:14,15) இது விஷயமாய் பவுல் சொல்லுவதையும் கேளுங்கள்" எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை; காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' என்கிறார் (1 கொரி 2:9)

5. கர்த்தர் நம்மை நேசிக்கிறபடியால் தவறு செய்யும் போதும் கீழ்ப்படியாமல் இருக்கும் போதும் நம்மைக் கண்டித்து மட்டாய்த் தண்டிக்கிறார். இதைக்குறித்து எபிரேய நிருப ஆசிரியர் உரைப்பதாவது: ''பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

அன்றியும், என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே.

—கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுவதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே

அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள். இவரோ நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகியவர்க்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" என்கிறார் (எபி. 12:4:11) ஆகவே, சில விஷயங்களில் நாம் விரும்பியதைத் தராமலும், நம்முடைய தவறுகளுக்காக நம்மைக் கடிந்துகொண்டு நமக்குச் சிறு தண்டனைகளைக் கொடுக்கும் போதும் அவர்மேல் நாம் சலித்துக்கொள்ளக் கூடாது. இது ஏன்? என்று சிந்தித்துப் பார்த்து திருந்த முயற்சி செய்ய வேண்டும்.

6. தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதைக் குறித்து யோவான் கூறும் ஆலோசனை ''தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை

நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

நியாயத் தீர்ப்பு நாளிலே நமக்கு தைரியமுண்டாயிருக்கத் தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால் அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகில் இருக்கிறோம்.

அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்.

தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?

தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" என்பதாகும்(1யோவான் 4:16-21)கிறிஸ்துவுங்கூட அவருடைய சீடர்களிடம் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனால் நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவான் 13:35).

7. நாம் தேவனுடைய குடும்பமாகிய சபையை நேசிக்க வேண்டும். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தார் (எபே 5:25) யோவான் தனது முதலாம் நிருபத்தில் "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம் என்று சகோதர அன்பை வலியுறுத்துகிறார் (1யோவான் 3:16). பேதுருகூட இவ்விஷயத்தில் மௌனமாயிருக்கவில்லை". "எல்லோரையும் கனம் பண்ணுங்கள். சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். தேவனுக்குப் பயந்திருங்கள். ராஜாவைக் கனம் பண்ணுங்கள்" என்று அறிவுரை கூறுகிறார் (1பேதுரு 2:17)

மெய்யாகவே பிதா நம்மை நேசிக்கிறதுபோல அவருடைய பிள்ளைகள் என்ற முறையில் நாம் அவரை நேசித்தால் அது நமக்கு அதிக நன்மை தரும். அது நம்மை இரட்சிப்பதோடு நில்லாமல் மற்றவர்களையும் கிறிஸ்துவின் பக்கமாக இழுத்துக் கொள்ள உதவும். உங்களுடைய அன்பு எப்படிப்பட்டது? நீங்கள் தேவனுடைய பிள்ளையா? பிதவாகிய தேவன் உங்கள் உள்ளத்தில் இருக்கிறார் என்ற நிச்சயம் உங்களுக்கு உண்டா? அவர் நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார். நமக்கு பாதுகாப்பு அளித்து வாழ்வளிக்கிறார். அவர் ஒரு நாளைக்கு உங்களைப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார் என்ற நம்பிக்கை உண்டா? அப்படிப்பட்ட விசுவாசம் உங்களுக்குள் இருந்தால் அது உங்கள் உலகக் கவலையையும் எதிர்காலத்தைப்பற்றிய பயத்தையும் நம்மைவிட்டு அகற்றுமே! பிதவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுமே இவைகள் எல்லாவற்றையும் செய்யவல்லவராயிருக்கிறார் என்பதை நாம் உண்மையாகவே விசுவாசித்தால் அவரை விடாமல் பற்றிக்கொள்வோம்

— J. C. ரோட்

# பரிசுத்த ஆவி

இன்றைய மார்க்க சம்பந்தமான உலகத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் அவருடைய வேலையைக் குறித்தும் ஒரு பெரும் குழப்பம் உண்டாக்கப்பட்டு இருக்கின்றது. சில சமயப் பிரிவுகளும் நாமகாரணக்கூட்டங்களும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் அவருடைய வேலையைப் பற்றியும் தத்தமக்கு ஏற்றத் தனிப்பட்ட நூதனக்கொள்கை ஒன்றைத் தவிர, வரையறுக்கப்பட்ட போதனையை உடையவர்களாக இல்லை. இந்த நிலைமை ஒரு வழியில் இயல்பானது என்றே கூறலாம்; ஏன் எனில் நம்முடைய மனங்கள் சடப்பொருள் உலகத்தால் இழுக்கப்பட்டு இயக்கப்படுகின்றன. இதனால் ஆவியினுடைய மூலாதாரமானத் தன்மையினைப் புரிந்துகொள்ளக் கூடாதவர்களாக இருக்கின்றோம். நாம் சடப்பொருள் உண்மைகளைத் தருக்கவாதப் பொருத்த முறையில் உய்த்துணரலாம்; ஆனால் ஆவியின் சத்தியங்களை நாம் விசுவாசத்தின் மூலம் வேதாகமத்திலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். வேதாகமம் பரிசுத்த ஆவியைப் பற்றித் தெளிவாகப் போதிக்கின்றது; ஆனால் வெளிப்படுத்தப்படாத காரியங்களைக் குறித்து நாம் யூகம் செய்யத் தொடங்குகிறபொழுது இடர்ப்பாடு ஏற்படுகின்றது. எல்லையை உடைய மனத்திற்கு ஆவியின் உலகம் ஒரு பெரும் மறை பொருளாகவே இருக்கும்; இருப்பினும் நாம் நம்புகிறதற்கு ஏற்றவாறு ஆவியைப்பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை எளிமையாகச் சொல்லுவதே நம்முடைய நோக்கம்.

முதலாவது, நாம் பரிசுத்த ஆவி என்னவாக இல்லை என்பதைப் பார்க்கலாம். பரிசுத்த ஆவி தெளிவற்று, இதுவோ அல்லது அதுவோ என்று சொல்லக்கூடியவராக இல்லை. அவர் வான-மண்டலமும் அல்ல; காற்றுமல்ல; மங்கலானதும் நிச்சயமும் தன்னுணர்வும் அற்ற ஒரு பிண்டமும் அல்ல; பரிசுத்த ஆவி தனி ஓர் ஆள், தேவத்துவத்துள் ஓர் அங்கத்தினர், வேதாகமம் முழுவதிலும் "அவர்" என்றே அவரைப்பற்றிப் பேசுகின்ற இடங்களிலெல்லாம் சொல்லப்பட்டு இருக்கின்றது. பரிசுத்த ஆவி தனி ஓர் ஆள் என்பதற்கும் தேவத்துவத்துள் ஒருவர் என்பதற்கும் சான்றுகள் காட்டுவதற்கு அநேக வேத வாக்கியங்கள் இருந்தபோதிலும் மத்தேயு 28:19 மட்டுமே இங்கு அதற்கு போதுமான சான்றாகும்.

இந்த மூன்று பேரும் எவ்வாறு மூவராகவும் இருந்துகொண்டு ஒருவராகவும் இருக்க முடியும் என்பதனை நாம் தருக்கவாத முறையில் அறிந்துகொள்ள இயலாது. ஏன் என்றால் நாம் அறிந்திருக்கிற உலகத்தின் உறவுமுறையில் அப்படிப்பட்டக் காரியம் முடியாததாக இருக்கின்றது. இருந்தபோதிலும் விசுவாசத்தின் மூலம் நாம் இந்த இரகசியத்தை நம்புகிறோம்; பரிசுத்த ஆவி தேவனாயிருக்கிறார். அதே சமயத்தில் அவர் பிதவாகிய தேவனோ அன்றிக் குமாரனாகிய தேவனோ அல்ல; ஆனால் அவர்களோடு ஒன்றாக இருக்கின்றார்.

## பரிசுத்த ஆவியின் வேலை

பரிசுத்த ஆவியானவர்தான் அமைப்பாளர், முறைப்படுத்துபவர். ஒழுங்கீனமாய் இருப்பதை அவர் செப்பம் செய்கிருர். உலகச் சிருஷ்டிப்பில் பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்கும் சிருஷ்டிக் கர்த்தாவாக, அல்லது பின்நின்று தூண்டுகிறவராக இருந்தார் என்பதைக் கவனியுங்கள். பிதவாகிய தேவன் சிருஷ்டிகரராய் இருக்கிருர்; ஆனுல் அவர் தேவத்துவத்தின் மற்ற பங்காளர்களால் துணையளிக்கப்பெறுகிருர். ஆதியாகமம் 1:26 ஐக் கவனியுங்கள். இந்த மூவரும் யாவர்? யோவான் 1:3-ஐப் பாருங்கள். இங்கே நமக்கு, ''அந்த வார்த்தைத் தேவனுக இருந்தது" என்றும் அந்த வார்த்தையின் மூலம் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது என்றும் சொல்லப் பெறுகிருேம். அப்படியென்ருல் எல்லாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு மூலகாரணமாக இருந்த இந்த ''வார்த்தை" யார்? யோவான் 1:14: ''அந்த வார்த்தை மாம்சமாகி.......... நமக்குள்ளே வாசம் பண்ணினுர்'' என்று நமக்குச் சொல்லுகிறது. எனவே சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த இந்த பிரதிநிதிதான் தேவனுடைய குமாரன் இவரே இயேசு கிறிஸ்துவாக மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆதியிலே இவ்வார்த்தையானவர் இருந்தார்; ஆனுல் வரலாற்றின் ஒரு கட்டத்தில் இந்த வார்த்தை மனிதனுனுர்; நாம் அவரையே இயேசுகிறிஸ்து என்று அழைக்கிருேம். இப்பொழுது சிருஷ்டிப்பில் ஆவியானவரின் வேலையைப் பாருங்கள். ஆதியாகமம் 1:2 ஐக் கவனியுங்கள். ஒழுங்கற்று இருந்த பூமியின் மீது ஆவியானவர் அசைவாடினுர்; பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. சிருஷ்டிக்கப்பட்டிருந்தும் தெளிவான உருவம் இல்லாமல் இருந்த உலகத்தின் மீது ஆவியானவர் அசைவாடி ஒழுங்குசெய்து நல்ல வடிவம் அமைத்தார்.

இரட்சிப்பின் திட்டத்திலும் இதே மாதிரியான வேலைப் பிரிவைக் காணலாம். இங்கும் பிதாவாகிய தேவன் திட்டத்திற்கு ஆக்கியோராகவும் பின்நின்று தூண்டுபவராகவும் இருக்கின்ருர். ஆனுல் தேவனுடைய குமாரன் பிரதிநிதியாக இருக்கிருர்; இவர் மூலம்தான் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. யோவான் 3:16ஐப் பாருங்கள். கிறிஸ்து சிலுவையில் மரித்த பிறகு பரிசுத்த ஆவியானவர் வந்து சபையை ஏற்படுத்தி அதனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுங்குமுறைகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டியவராக இருந்தார். யோவான் 15:26, 27; 16:7—13 வசனங்களை ஆழ்ந்து படியுங்கள். இயேசு போன பிறகுதான் பரிசுத்த ஆவியானவர் வரவேண்டும் என்பதைக் கவனியுங்கள்; அவர் வந்து இயேசு அப்போஸ்தலர்களுக்குப் போதித்துவிட்டுச் சென்ற சத்தியத்திலும், அந்த நேரத்தில் அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு இயலாதவைகளாக இருந்த மற்றக் காரியங்களிலும் அவர்களை வழி நடத்துவார். இயேசுவினுடைய வேலை அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் முடிவுற்றது; என்ருலும் ஆவியானவர் சபையை ஏற்படுத்தி அதனுடைய வழி நடத்துதலுக்காகப் புதிய ஏற்பாட்டைக் கொடுக்கிறவரைக்கும் மனிதனுக்கு இரட்சிப்பு உறுதியளிக்கப்படவில்லை

இவ்வாறாக உலகம் அற்புதத்தின் மூலம் சிருஷ்டிக்கப்பட்டது. எனினும், அது ஒழுங்குமுறைகளாலும் சட்டங்களாலும் இயங்கத்தக்கதாக ஏற்படுத்தப்பெற்றது. அவ்வாறே சபையும் அற்புதங்களினாலும் சிறந்த வேலைப்பாடுகளினாலும் ஏற்படுத்தப்பெற்றது. ஆனால் அதனுடைய தொடர்ந்த வாழ்வு பரிசுத்த ஆவியானவரால் புதிய ஏற்பாட்டில் அருளப் பெற்றுள்ள ஒழுங்குமுறைகளாலும் சட்டத்தாலும் நடத்தப் பெற வேண்டியதாக உள்ளது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் பிதாவாகிய தேவன் சிருஷ்டி கர்த்தாவாகவும், குமாரனாகிய தேவன் பிரதிநிதியாகவும், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் அமைப்பாளராகவும் ஒழுங்குபடுத்துகிறவராகவும் இருக்கின்றனர். உலகத்தை இயங்கச் செய்து அதனுடைய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பெற்ற பிறகு சிருஷ்டிப்புக்காகத் தனிப்பட்ட அற்புதங்கள் தேவை இல்லாமல் போயின.

## பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்குரிய வழிவகைகள்:

இயேசு கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்தார். யோவான் 3:34-ஐ பாருங்கள். நமக்கு அறிவிக்கப்பட்டு இருக்கின்ற அளவில், கிறிஸ்து ஒருவர் மட்டுமே ஆவியானவரை வரையறை இன்றி பயன்படுத்துமாறு அவரைப் பெற்றிருந்தார். மற்றவர்கள் குறிப்பிட்ட காரணங்களுக்காகவும் வேலைகளுக்காகவும் அவரைப் பெற்றார்கள். கிறிஸ்து அவரை அளவில்லாமல் பெற்றார். கிறிஸ்து ஞான ஸ்நானம் பெற்ற உடனே ஆவியானவர் புறாவைப்போல் அவர் மீது இறங்கினார். மத்தேயு 9:16, 17 பாருங்கள்.

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களும், பிறகு கொர்நேலியுவின் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானத்தைப் பெற்றார்கள். அவர் பரலோகத்திலிருந்து இவர்கள் மீது அப்படியே இறங்கினபடியினால் அவர்கள் பரிசுத்த ஆவிக்குள் முழுக்கப்பட்டார்கள். சபை பெந்தெகோஸ்தே நாளன்று சட்டப்படி ஏற்படுத்தப்பட்டது. அந்த நாளன்றுதான் அப்போஸ்தலர்கள் தேவனிடமிருந்து ஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் 2:1-4 பாருங்கள். இந்த அதிகாரத்தை வாசிக்கிறதிலிருந்து இந்த ஞானஸ்நான அளவான பரிசுத்த ஆவியானவருடைய நோக்கம் என்ன என்பதை நீங்கள் காணலாம். அவர்களைச் சுற்றியிருந்த தேவ பக்தியுள்ள யூதர்களுக்கு அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதற்கும், அவர்கள் அவருடைய அதிகாரத்தினால் பேசக்கூடியவர்கள் என்பதற்கும் அது ஒரு நிரூபணமாக இருந்தது. இங்கே அவர்களுடைய குணப்படுத்தலுடனோ அன்றி அவர்களுடைய இரட்சிப்புடனோ எவ்வழியிலும் பரிசுத்த ஆவியானவர் நேர்முகமாக ஒன்றும் செய்வதற்கு இல்லை என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள்மீது இறங்கினார் அவர்களுடைய போதனை தொழிலில் அவர் அவர்களுக்கு உதவ வேண்டியவராக இருந்தார். புதிய

ஏற்பாடு இன்னும் எழுதப்பெறவில்லை ஆகையால், இந்த மனிதர்கள் தேவனிடமிருந்து வந்த சத்தியத்தைத் தான் பேசுகிறார்கள் என்பதனை அவர் அறிவதற்கு மக்களுக்குச் சில வழிவகைகள் தேவையாக இருந்தன.

கொர்நேலியும் அவனுடைய வீட்டாருங்கூட பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர் 10:44-48 வாசியுங்கள். இவர்கள் தான் முதன்முதல் கிறிஸ்துவினிடம் மனந்திருப்பப்பட்ட புறச் சாதியார். புறச்சாதியாரும் ஞான ஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிக்கலாம் என்பதை யூதர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவதற்கு ஏதுவாக ஆவியானவர் புறச்சாதியார் மீது இறங்கினார் என்பதைப் பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவையும் அவனுடைய வீட்டாரையும் இரட்சிக்கவில்லை. ஏன் என்றால் ஆவியானவர் இறங்கிய பிறகு பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படிக் கட்டளையிட்டார் அப். 10:48 ஞான ஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கின்ற படியினால் இங்கே பரிசுத்த ஆவியான வருடைய வருகை அதனோடு எவ்வகையிலும் தொடர்புடையதாக இல்லை; மற்றபடி தண்ணீர் ஞானஸ்நானம் தேவையற்றதாக இருக்குமே. ஆவியானவருடைய வருகை, புறச்சாதியார் கிறிஸ்துவுக்குள் வருகிறதை பேதுரு தடை செய்ய முடியாது என்பதனை அவர் அறிந்துகொள்ளச் செய்தது என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

பரிசுத்த ஆவியினுடைய ஞான ஸ்நானம் இந்த இரண்டு மட்டுமே, ஒன்று, சபையின் தொடக்கத்தில் அப்போஸ்தலர்கள் மீது வந்தது; இரண்டாவது புறச்சாதியார் மீது வந்தது. இந்த இரண்டினுள் எந்த நிகழ்ச்சியிலேனும் மனந்திரும்பிக் குணப்படுத்துவதற்காகவோ அன்றி இரட்சிப்பதற்கோ ஓர் ஏதுவாக பரிசுத்த ஆவியானவர் வரவில்லை. இன்றைக்கும் பரிசுத்த ஆவியினுடைய ஞான ஸ்நானத்தை எந்த மனிதனும் பெற்றுக்கொள்வான் என்பதற்கு வாக்குத்தத்தம் ஒன்றும் இல்லை. அது சபையினுடைய அற்புதத் தொடக்கத்தின் ஒரு பங்காகும்.

மூன்றாவதாக அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை மற்றவர்கள் மீது வைக்கிறதின் மூலம் பரிசுத்த ஆவி அருளப்பட்டார். அப்போஸ் தலர்கள் உலகத்தில் இருந்த காலத்தில மனந்திரும்பிக் குணப்பட்ட கிறிஸ்தவர்கள் மீது தங்களது கைகளை வைத்து ஆவியின் மூலம் அவர்கள் அற்புதங்கள் செய்யத்தக்கதாக வல்லமையை வழங்கும் அதிகாரமுடை யவர்களாக இருந்தார்கள். இதுவரையில் இவர்களைத் தவிர வேறு யாரும் இந்த அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள் என்று நம்மால் சொல்லக்கூடியதாக இல்லை.

முன்சொன்ன வழியில் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் தங்களுடைய பிரசங்கத்திற்குச் சான்றாக அற்புதங்கள் செய்ய முடியும். ஆனால் அவர்களும் மற்றவர்கள்மீது தங்களுடைய கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியை வழங்க முடியாது. அப்போ

ஸ்தலர்கள் மட்டுந்தான் இதைச் செய்ய முடியும். அப்போஸ்தலர்
8:5-24ஐ விழிப்புடன் வாசியுங்கள்: பிலிப்பு ஒரு கிறிஸ்தவ சுவிசேஷகர்
ஊழியக்காரர்; ஆனால் அவர் அப்போஸ்தலன் அல்ல. ஆனால் அவரால்
சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத் தானாகவே அற்புதங்களைச் செய்யமுடியும்
என்றாலும் அவருடைய பிரசங்கத்தினால் குணப்பட்டவர்களுக்கு அவரால்
ஆவியை வழங்க முடியவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர்கள் மீது
கைகளை வைக்கிறதற்காக இவர் எருசலேமிலிருந்து இரண்டு அப்போஸ்
தலர்களை அழைக்க வேண்டி இருந்தது. மறுபடியும் இங்கேயும் இந்தச்
சமாரியாவிலிருந்த மக்கள் அற்புதங்கள் செய்வதற்காக இந்த வல்ல
மையை பெறுவதற்கு முன்னதாகவே அவர்கள் விசுவாசித்து கிறிஸ்துவுக்
குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள் என்பதைக் காணுங்கள். அப்-
போஸ்தலர்களால் மட்டுமே தங்களுடைய கைகளை வைக்கிறதின் மூலம்
ஆவியை வழங்க முடியுமாகையால், அவர்கள் மரித்ததும் சூழ்நிலைக்
கட்டுப்பாடுடன் கூடிய இந்த வல்லமை நின்று போயிற்று. அப்போஸ்
தலர்களுடைய கைகள் வைக்கப்பட்ட தலைமுறை மறைந்ததும், பவுல்
அவைகள் ஒழிந்துபோம் என்று சொன்னவாறு, அற்புதங்களும் ஒழிந்து
போயின. பரிசுத்த ஆவியின் ஞானஸ்தானத்திலும், அப்போஸ்தலர்
களுடைய கைகளை வைத்தலின் மூலமும் அருளப்பட்ட பரிசுத்த
ஆவி, மனந்திரும்பிக் குணப்படுத்துவதற்கு என்று அருளப்படாமல்
சபையினுடைய தொடக்கச் சூழ்நிலைக் கட்டுப்பாடுகளுடன் கூடிய சிறந்த
இன்றியமையாத காரணங்களுக்காக அருளப்பட்டார். பரிசுத்த ஆவி-
யைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய இந்த வழி வகைகள் சபையின் நிரந்
தர அமைப்பின் ஒரு பங்காய்த் தொடர்ந்து இருக்க வேண்டியவைகள்
அன்று ஆனால் சபை தொடக்கத்தில் நிறுவப்படுவதற்கு அவைகள்
இன்றியமையாதவைகளாகும். ஆவியினுடைய ஞானஸ்நானத்தின் வாக்கு
தத்தம் இன்றைக்கு ஒருவருக்கும் இல்லை. கட்டாயமாக அப்போஸ்தலர்
களுடைய கைகளை வைத்தலின் மூலம் ஒருவரும் அவரைப் பெற்றுக்
கொள்ளுகிறதும் இல்லை.

இருப்பினும் இன்றைக்கும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிற அத்தனைப்
பேருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார். பரிசுத்த ஆவியைப்
பெற்றுக்கொள்கிற இந்த வழி சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதே ஆகும்.
அப்போஸ்தலர் 5:32ஐப் பாருங்கள். எல்லா கிறிஸ்தவர்களும் "ஆவி
யினால் பிறந்தவர்கள்" என்று நாம் அறிந்திருக்கிறோம்; இந்தப் புதிய
பிறவி "பரத்திலிருந்து" உண்டானது. ஆயினும் நாம் ஆவியை அற்புத
முறையில் பெறுகிறதுஇல்லை. பவுல், நம்முடைய இருதயங்களில் அன்பும்
நம்முடைய வாழ்க்கையில் விசுவாசமும் நம்பிக்கையும் அற்புதங்களைக்
காட்டிலும் பெருமதிப்புடையன என்றார், அற்புதங்கள் ஒழிந்து போனா
லும் இவை மூன்றும் தொடர்ந்து இருக்கும் என்றும் எழுதினார். விசு
வாசம், நம்பிக்கை, அன்பு ஆகியன சபையின் அமைப்பில் நிரந்தரமாய்
நின்று நிலவும் பண்புகளாகும்; அற்புதங்கள் அதனுடைய தொடக்கந்

திற்குச் சூழ்நிலை கட்டுப்பாடுகளுடன் இன்றியமையாதவைவாகும் இன்றைக்கு நமக்கு புதிய ஏற்பாடு இருக்கின்றது. நமக்குச் செவி சாய்க்கிற அத்துணைப்பேரும் நாம் தேவனிடமிருந்து வந்த சத்தியத்தைப் பேசுகிறோமோ இல்லையோ என்பதைத் தாங்களாகவே அறிந்துகொள்ள முடியும். நம்முடைய பிரசங்கத்தை அற்புதத்தினாலல்ல, தேவனுடைய வார்த்தையினால் நிரூபிக்கிறோம். ஏந்த ஒரு நிறுவனத்தின் தொடக்கத்திலும், அதனுடைய ஒழுங்கான நடைமுறைச் சட்டங்களை ஏற்படுத்துகிறவரைக்கும் தனிப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சட்டங்கள் ஏற்படுத்தப்பெற்ற பிறகு, அந்த நிறுவனம் தனிப்பட்ட நடைமுறைகளால் அன்றி அந்தச் சட்டங்களால் வாழ்கிறது. I கொரிந்தியர் 13:1-4, 8-13 வசனங்களைக் கவனமாய் வாசியுங்கள்.

— ஞான சிகாமணி

## சபையின் பெயர்

புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஒரே ஒரு சபை இருந்ததினால் மற்ற கூட்டங்களிலிருந்து அதை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஒரு பெயர் தேவையில்லாதிருந்தது. கிறிஸ்தவர்களை வெறுமெனே, "சபை" யென்றும் அல்லது "இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகள்" என்றும் சுட்டிக்காட்டலாம். புதிய ஏற்பாட்டில் பல பெயர்கள் இருக்கின்றன; இருந்தாலும் அவையெல்லாம் சபையைச் சுட்டிக் காட்டவே பயன்படுத்தப்பட்டுள்ளன; அவைகள் கட்டாயமாக, கொள்கைப் பிடிவாதமானவைகளாகவோ அல்லது பிரிவினைப் பெயர்க் கூட்டங்களைக் குறிக்கும் தொடர்ச் சொற்களாகவோ கருதிப் பயன்படுத்தப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள இந்தச் சுட்டுப் பெயர்களுள் ஒன்றினை நாம் மனிதன் கற்பித்த பெயர் அல்லது ஒரு மனிதனுக்கு மதிப்பு தெரிவிக்கிறதற்காக இடப்பட்ட பெயர் ஒன்றிற்குப் பதிலாக வழங்கக்கூடாது.

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தியிருக்கிற, கீழே கொடுக்கப்பட்டுள்ள சபையின் பெயர்களைக் கவனியுங்கள்: தேவனுடைய சபை: I கொரி. 1:2; II கொரி. 1:1; I தீமோ. 3:15; கிறிஸ்துவின் சரீரம்: கொலே. 1:18; எபே. 5:23; கர்த்தருடைய சபை: அப்போஸ்தலர் 20:28; கிறிஸ்துவின் சபையார்: ரோமர் 16:16; மத்தேயு 16:18.

இன்றைக்கு ஐந்நூறுக்கும் அதிகமான சபைப் பிரிவுகள் இருப்பது கிறிஸ்துவின் சரீரத்தைக் குத்திக் கூறுபோடுவதற்குச் சமம். சிந்திப்பீர்! செயல்படுவீர்!

# கிறிஸ்தவர்கள்

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களுக்கு மிகக் குறைவாக வழங்கப்பட்ட பெயர் கிறிஸ்தவர் என்பது; ஆனால் இந்தப் பெயர் தான் இப்பொழுது மிக அதிகமாக மக்கள் மத்தியிலே வழங்கப்படுவதும், உலகம் எங்கும் வழங்கப்படுவதுமாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவன்" என்னும் சொல் மூன்று இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. சீரியாவின் அந்தியோகியாவிலே இந்தப் பெயர் ஆரம்பமானது என்று லூக்கா சொல்லுகிறார்; அங்கு பர்னபா செய்துவந்த ஊழியத்தில் அவருக்கு உதவி செய்ய பவுல் வந்த பின்னரே இந்தப் பெயர் தோன்றியது. அந்த இளைய திருச்சபையின் வாழ்க்கையிலே விளங்கின ஒரு சிறப்புமிக்க ஆண்டில், சீடர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர். அப். 11:26.

இந்தப் பெயரின் தோற்றத்தைக் குறித்து, வேத மாணவர்களுக்கு இடையில் உடன்பாடு இல்லை, நம்முடைய இந்த ஆராய்ச்சியிலும் இது அடிப்படை உயிர்நிலையான ஒரு காரியமன்று. அப்போஸ்தலர்கள் அந்தப் பெயரைக் கொடுத்திருப்பார்களானால், அது அப்போஸ்தல ஏவுதலையும் அதிகாரத்தையும் உடையதாக இருக்கும். அது புறம்பே இருந்தவர்களால் கொடுக்கப்பட்டு, அப்போஸ்தலரின் தலைமையில் திருச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்குமானால், அதன் வழக்கு அதிகாரப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இந்தப் பெயரின் தகுதியுடைமையானது அதனுடைய தோற்ற மூலத்தின்மீது சார்ந்திருப்பதைவிட அதனுடைய பொருத்தத்தின்மீது சார்ந்திருக்கிறது. அந்தப் பெயரின் வடிவம் அதனைக் கேட்டவுடனே அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு அது "கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு" வழங்கப்பட்ட பெயர் என்பதை விளக்கப்படுத்திக் காட்டியது; இன்றைக்கும் அந்தப் பெயர் அதே பொருளைச் சுட்டிக்காட்டுகிறது. "கிறிஸ்து என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது இது எபிரேய மொழியில் "மேசியா" என்பதற்குச் சமமானது.

'CHRISTIAN' (கிறிஸ்தியன்) என்னும் ஆங்கிலச் சொல்லில் 'CHIRST' என்பது கிரேக்க மூலம்; 'IAN' என்பது இலத்தீன். இதன் பொருள் 'பின்பற்றுபவர்கள்' என்பதாகும். 'கிறிஸ்தியன்' என்பதற்குக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்பது பொருள். தமிழில் 'கிறிஸ்தவன்' என்று வழங்கும் பெயரைக் 'கிறிஸ்து+அவன்' என்று பிரிக்கலாம். இதன் பொருள் 'அவன் கிறிஸ்தவன்' அல்லது 'அவன் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன்' என்றாகிறது.

புதிய ஏற்பாட்டில் இப்பெயர் வழங்கப்படும் இரண்டாவது இடம் மிகுந்த கவனத்திற்குரியது. பவுல், அப்போஸ்தலன் என்னும் நிலையில் தம்முடைய நற்செய்தித் திருப்பணியில் பெரும் பகுதியைச் செய்து

நிறைவேற்றிவிட்டார். செசரியா சிறைச்சாலையில் தமது இரண்டு ஆண்டுச் சிறைவாசத்தை அவர் நிறைவேற்றும் வேளை; இதே நேரத்தில் ரோமாபுரிக்குச் செல்வதற்கும் ஆயத்தமாகக் காத்திருந்தார். இராயனுடைய நீதி மன்றத்திலே அவருடைய காரியம் விசாரிக்கப்பட வேண்டும் என்று அவர் மனு செய்து கொண்டபடியினால் அவர் ரோமாபுரிக்குப் போகவேண்டியிருந்தது. காவலருடன் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் அவர் அகரிப்பா அரசனுக்கு முன்னால், உலகசெல்வத்துக்கும் அதிகாரத்துக்கும் உச்ச நிலையினை விளக்கும் பிரதிநிதித்துவம் அமைந்துள்ள குறிப்பிடத்தக்க ஒரு மன்றத்திற்கு முன்னால் நின்றார்; அவர்களுக்கு முன்னர் தாம் கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டவரலாற்றினைக் கூறினார்.

அவர் அவ்வாறு சொல்லிக்கொண்டிருந்த வேளையில், ஒரு விறுவிறுப்பான கட்டத்திலே அகரிப்பா அரசன், ஒருவேளை இகழ்ச்சி தொனிக்கும் குரலில், 'நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்' என்று சொன்னான்.

அகிரிப்பாவின் கூற்றுக்குப் பதில் கொடுக்கையில் பவுல் அந்தப் பெயரை பயன்படுத்தவில்லை. ஆனால் பவுல் அதன் உறவினை ஒப்புக்கொள்ளுகின்றார்: 'நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன்.' மற்றவர்களும் தன்னைப் போலக் (கட்டுகளைத் தவிர) கிறிஸ்தவர்களாக வேண்டும் என்று விரும்புவதைப் பவுல் அறிக்கையிட்டார். அப். 26:28, 29.

இந்தப் பெயரின் இன்னொரு வழக்கினை இந்த நிகழ்ச்சிக்குப் பல ஆண்டுகள் கழித்தே காண்கிறோம். இயேசுவைப் பின்பற்றுபவர்களைத் துன்புறுத்துதல் நாளும் அதிகரித்துக்கொண்டே வந்தது. இங்கும் அங்கும் அவருடைய திருநாமத்தை அறிக்கை செய்து கொண்டு வந்த திருக்கூட்டங்களுக்கு ஆபத்துகளும் மிகுதியாகிக் கொண்டே வந்தன. இந்தச் சூழ்நிலையில் கல்-மனிதராகிய பேதுரு புறவினத்தாரின் உலகத்திலே சிதறிக்கிடந்த தம் சகோதரர்களுக்கு, அவர்களிடையே நடந்து வந்த நெருப்பு போன்ற சோதனையை எதிர்பாராதது என்று கருத வேண்டாம் என்று எழுதுகிறார்.

கிறிஸ்து அவர்களுக்காகப் பாடுபட்டார் எனவே அவர்களும் அவருடைய பாடுகளில் பங்கு பெறுகின்றபடியால் மகிழ்ச்சியடையலாம். இயேசுவின் திருநாமத்தினிமித்தம் பழி கூறப்படுதல் பாக்கியம் நிறைந்தது. அவர்களுள் யாருமே ஒரு திருடனாக, அல்லது மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுபவனாகத் துன்பம் அனுபவிப்பது அவமானத்திற்குரிய செயலாகும். ஆனால் அவர்களுள் யாரேனும் கிறிஸ்தவனாக வாழ்வதினால் பாடுபட்டால் அது அவமானத்திற்குரிய-

தன்று. 'இந்தத் திருநாமத்தில் கடவுளை மகிமைப்படுத்தல்' ஒரு மகிமை நிறைந்த காரியம் : 1 பேதுரு 4:12-16.

பேதுரு தமது நிருபத்தை எழுதிய காலத்தில் கிறிஸ்தவர் என்னும் பெயர், யூதரிலும் புறவினத்தாரிலும் இயேசுவைப் பின்பற்றியவர் அனைவரும் பொதுவாக அணிந்துகொண்ட பெயராக இருந்தது என்பது வெளிப்படையாகத் தோன்றுகிறது; வெளி உலகத்து மக்களாலும் அது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு வழங்கப்பட்ட இடு பெயர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

'கிறிஸ்தவன்' என்னும் பெயரை அணிந்து கொண்டுள்ள ஒருவனுடைய வாழ்க்கையிலே அது என்ன பொருளைத் தருகின்றது?

பவுலின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு நாம் இந்தப் பொருளைத் தெளியலாம். இந்த ஆராய்ச்சிக்குப் பவுலின் வாழ்க்கையை விட வேறு சமமான ஆதாரத்தானம் நமக்கு இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. பவுல் ஒரு கிறிஸ்தவர் இந்தப் பெயர் முதன் முதல் வழங்கப்பட்டபோது அவர் அதனை அணிந்துகொண்டார் என்பது வெளிப்படை பின்னர் அவருடைய அற்புதமான ஊழியக்காலத்தில் அவர் அதனைப் பெருமிதத்துடன் அறிக்கை செய்தார். அவர் தமது வாழ்க்கையின் இறுதிவரையில் அத்திருப் பெயரில் மேன்மைபாராட்டி வந்தாரா என்று நாம் சந்தேகப்பட ஏதுவுண்டா? இத் திருப்பெயரின் பொருளை அறிந்துகொள்வதற்கு அவரை நாம் ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்வதில் தவறு ஒன்றும் இருக்காது.

முதலாவது, பவுலின் வாழ்க்கையிலே, கிறிஸ்தவன் என்னும் திருப்பெயர் ஓர் உண்மை ஒப்புக்கொள்ளுதலுக்கு ஆதாரமாக நிற்கின்றது. பவுல், இயேசுவைப் பற்றிய ஒரு புதிய உண்மையை ஒப்புக்கொண்டார். ஒரு சமயத்தில் அவர் இயேசுவை மறுதலித்தார். இப்பொழுது, இயேசு உயிருள்ள கடவுளின் திருமைந்தர் என்பதைப் பவுல் ஒப்புக்கொண்டார். இயேசு கடவுளின் திருமைந்தர் என்னும் நிலையில் இஸ்ரவேலரின் எல்லா நம்பிக்கைகளும் அவரில் நிறைவேற்றம் அடைந்தன. அது மட்டுமன்று, உலகத்தில் எல்லாத் தேவைகளும் அவரில் நிறைவேற்றப்பட்டன; நற்செய்தியின் மாபெரும் உண்மைகள் உள்ளடங்கியுள்ளன. இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்; அவருடைய தெய்வீக குமாரத்துவம்! அவர் உயர்த்தப்பட்டுள்ளார். அவருடைய கர்த்தத்துவம் நிலை நாட்டப்பட்டுள்ளது. அவர் எல்லாவற்றிலும் முதன்மையானவர். அவர் முழுமையானவர்.

பவுல் தமது உபதேசத்தில் இந்தக் காரியங்களை அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றார்! பவுல் இவைகளை விளக்குவதற்குப் பயன்படுத்துகின்ற சொல்லாட்சிகள் எவ்வளவு ஆழமும் மனத்தில் பதியக்கூடியனவுமாக உள்ளன! இவைகள் பவுலுக்குத் தலைமையான உண்மைகள். அவர்

அரியணையில் இருக்கும் இயேசுவை மிகவும் ஆழமாகச் சிந்திக்கிறார். வரலாற்றில் எல்லா உண்மைகளும், ஆர்வத்திலும் முக்கியத்திலும் அதற்குக் கீழ்பட்டவை தான். உயர்த்தப்பட்ட கிறிஸ்துவுடன் ஒப்பிட்டு உறவுப்படுத்திக் காணும் நிலையில்தான் மற்ற எல்லாக் காரியங்களின் பொருளும்முக்கியமும் கிடைக்கின்றன.

ஆதிகாலச் சீடர்களிடம் வெளிப்படையாய்க் காணப்படும் விசுவாசம் இதுவே. பெந்தெகொஸ்தே திருநாளன்று பேதுரு அருளிச் செய்த பிரசங்கத்தின் அடிப்படைப் பொருள் இதுதான். ஸ்தேவானுடைய பெருஞ் சிறப்பு வாய்ந்த பிரசங்கத்தின் அடிப்படைப் பொருளும் இதுதான். அப்போஸ்தலப் பிரசங்கத்தின் சாரம் 'கிறிஸ்து', அவருடைய இராச்சியத்தின் காரியங்கள்: சீடர்கள் சிதறடிக்கப்பட்டப் பின்னர், அவர்கள் சென்றவிடம் எல்லாம் பிரசிங்கித் 'திருவசனம்' இயேசுவின் கிறிஸ்தத்துவம்; அவர்களுடைய ஆண்டவரின் இத்தெய்வீகமும் முதன்மையுமே ஆண்களும் பெண்களும் அவர்களுடைய செய்திக்குச் செவிகொடுத்து வாழ்ந்த 'வழி,' உயர்த்தப்பட்ட கிறிஸ்துவுக்குத் தங்களைச் சரணாகதியாக ஒப்புவித்து ஊழியம் செய்த வழியேயாகும்.

இந்த வாழ்க்கையே, சிற்றின்ப மயக்கம் நிறைந்த அந்தியோகியா மக்களுக்குப் பெரிய தாக்குதலாக இருந்தது; பிரசங்கிமாரின் வாழ்க்கையிலும் இரட்சிப்படைந்த மக்களின் வாழ்க்கையிலும் வெளிப்படையாய்க் காணப்பட்ட இந்தப் பண்பு—ஆச்சரியமான ஒரு புதிய உண்மையை ஒப்புக்கொண்டு வாழும் நிலை அவர்களை மெய்சிலிர்க்கச் செய்தது; அவர்களுடைய சிந்தனையைத் தெளிவாக்கியது; அவர்களுடைய மனசாட்சியை இருக்கப்பிடித்துக் கொண்டது; அவர்களுடைய விருப்பங்களைக் கீழ்படுத்தி ஆண்டுகொண்டது; அவர்கள் தங்களுடைய பழைய வாழ்க்கையிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, புதியவாழ்க்கையின் நடைமுறைக்குத் தங்களை முற்றிலுமாக ஒப்புவித்து அதிலே பிற எல்லாவற்றையும்விட தலைமையான ஈடுபாடு கொள்ளும் வரைக்கும் அந்தப் புதிய உண்மை ஒப்புக்கொண்டமை அவர்களைப் பற்றிக்கொண்டது.

யூதர்கள் தங்களுடைய மிக நீண்டகால பாரம்பரியங்களை விட்டு விலகுவதைக் காண்பது ஒரு வியப்பான காரியந்தான்; இது வரையில் அவர்கள் அவைகளுக்காக எள்ளிநகையாடப்படவும் மரிக்கவும் விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள்; புறச்சாதியார் அவர்களுடைய பிதாக்களின் பலிபீடங்களையும், தேசத்தாரின் பலிபீடங்களையும் கைவிட்டார்கள்; இரு இனத்தாரும் சந்தித்தனர். அவர்கள் ஒப்புக்கொண்ட புதிய நம்பிக்கையின் அடிப்படையிலே ஒற்றுமையாக இணைத்துக் கட்டப்பட்டனர்.

அவர்களை இணைத்த புதிய நம்பிக்கைக் கிறிஸ்துவே! இந்தப் புதிய பிரசங்கிமார் அறிவித்த கிறிஸ்து; நாசரேத்து ஊராராகிய இயேசு என்று யூத மக்கள் புறக்கணித்த கிறிஸ்து; புறவினத்தார் சிலுவையில்

அறைந்த கிறிஸ்து. இப்பொழுது யூதரும் புறவினத்தாரும் அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்; யூதர், அவர்கள் மிக நீண்ட எதிர் நோக்கிலிருந்த மேசியாவாக அவரை ஏற்றுக்கொண்டனர்; புறவினத்தார் தங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக அவரை ஏற்றுக்கொண்டனர். யூதரும் புறவினத்தாரும் உயிருள்ள கடவுளின் திருமைந்தர் என்று அவரை ஏற்றுக்கொண்டனர். இந்த மக்களிடத்திலே கிறிஸ்து தலைமையானவராக இருந்தார். அவர்கள் கிறிஸ்தவர்கள் அவர்கள் கிறிஸ்துவில் வைத்த நம்பிக்கையே அவர்களைச் சிறப்பித்து வேறுபடுத்திக்காட்டிய பண்புநலம்.

பவுலின் வாழ்க்கையிலே அவ்வாறு காணப்பட்டது. பவுலின் இந்த நம்பிக்கையைச் சிந்திக்காமல் அவருடைய குணப்படுதலுக்கு அல்லது அவருடைய வாழ்க்கைக்கு நாம் காரணம் சொல்ல இயலாது. சிறப்புமிக்க வாழ்க்கைகள் ஆழமில்லாத வேர்களிலிருந்து வளருவதில்லை. வல்லமையான ஆறுகள், சிறியனவும் தொடர்ந்து தண்ணீர் ஊறுதலவுமான ஊற்றுகளிலிருந்து பாய்வதுமில்லை. பவுல் அலைமீது மிதந்து கொண்டு எடுத்துச் செல்லப்பட்ட மிதப்புக்கட்டை அன்று.

அவர் ஒரு வல்லமையான நீராவிக் கப்பல்; கடுமையும் பயங்கரமும் நிறைந்த தாறுமாறான காற்றுகளை எதிர்த்து அவற்றின் வழியே பிளந்துகொண்டு நேராகத் தன் துறைமுகத்தை நோக்கிச் செல்லும் நீராவிக் கப்பலைப் போன்றவர் பவுல். ஆழமான, ஆணித்தரமான, அசைக்க இயலாத பெரிய நம்பிக்கையே அவரை நடத்தியது! காத்தது! அது இயேசுவின் கிறிஸ்துவத்தையும், தெய்வீகத்தையும், தலைமையினையும் பற்றிய நம்பிக்கையே!

இந்த நம்பிக்கை கிறிஸ்தவவிசுவாசத்தில் இன்றியமையாதது ஒன்று. மனிதர்கள் கிறிஸ்து இல்லாமல் 'கிறிஸ்தவர்களாக' இருப்பதைக் குறித்துப் பேசுகின்றனர்கள். அப்போஸ்தல போதனை, இயேசுவுக்குக் கொடுக்கும் இடத்தையும் நடத்தைச் சிறப்பையும் அவர்கள் அவருக்கு மறுதலிப்பார்கள். அவர்கள், நாம் அப்போஸ்தலர்களையும் கடந்து இயேசுவினிடத்திலேயே சென்று அவரிலே மிகச்சிறந்தவரும் மனிதருக்குள்ளே பெரியவருமான மனிதரைக் காணலாம் என்பார். அவரைக் குறித்துச் சிறப்பான வகையில் தெய்வீகமாக எதுவும் இல்லை; ஒவ்வொரு மனிதரிலும் மறைந்திருக்கும் தெய்வீகந்தான் அவரிலும் உண்டு; ஒவ்வொரு மனிதரிலும் இருக்கக்கூடிய அளவுதான் அவரிலும் காண வேண்டும்—அவருக்கு அற்புதமான பிறப்பு இல்லை; பல இரத்த சாட்சிகளான மரணங்களுள் ஒன்றே அவருடையது; அவருடைய மரணத்திலே வேறு சிறப்பு எதுவும் இல்லை; கல்லறையிலிருந்து உண்மையான உயிர்த்தெழுதல் எதுவும் இல்லை; எல்லா உலகங்களுக்கும் ஆண்டவராக உயர்த்தப்பட்ட நிலைமை எதுவும் இல்லை: அவர் சிறப்பு வாய்ந்த பெரியவர்களுள் ஒருவர்—இன்னும் மிகப் பெரியவர்—ஆனால் அவர் தனி

ஒன்றுனவர் அன்று. எல்லாவற்றிற்கும் முடிவானவர் என்று கொள்ள இயலாது. இத்தகைய விசுவாசத்தைச் சிலர் அறிக்கைசெய்கின்றனர்; ஏன்றாலும் அவர்கள் தங்களைக் 'கிறிஸ்தவர்கள்' என்று உரிமை பாராட்டிக்கொள்ளுகின்றனர்.

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவனைச் சித்திரித்துக் காட்டுவது இதுவன்று. இது தர்சு பட்டணத்துக் கிறிஸ்தவனாகிய சவுலைப் போன்றதன்று. இத்தகையவன் பெயர்ப் பொருத்தமற்ற போலியான கிறிஸ்தவன்; இவன் இந்தத் திருப்பெயருக்குத் தகுதியுடையவனன்று.

இரண்டாவதாக, பவுலின் காரியத்தில் 'கிறிஸ்தவன்' என்னும் திருப்பெயர் ஒரு குறிக்கோளுக்காக அமைந்தது. கிறிஸ்துவின் அந்தக் குறிக்கோளினைப் பவுல் தன் வாழ்க்கைப்பணியாக எடுத்துக்கொண்டார். அதனை அவர் தமது முழு இதயத்துடன் மேற்கொண்டார். அவர் அதற்காக வாழவும் அதற்காகச் சாகவும் சித்தமுள்ளவராயிருந்தார். அந்தப் பெரிய செயல் நோக்கினைத் தொடர்ந்து செயல்பட்டு வந்ததன் விளைவாகவே அவர் அகிரிப்பாவிற்கு முன்னால் வந்து நின்றார். இயேசுவின் ஒரு பிரசங்கியாராக அவர் கைதுசெய்யப்பட்டுக் கட்டப்பட்டார். நற்செய்தியினிமித்தமாக ஆண்டவருடைய சிறைக் கைதியாக அவர் அகரிப்பாவிற்கு முன்னால் நின்றார். அவருடைய முழுவாழ்வும் கிறிஸ்துவை அரசராக அறிவிப்பதும், எற்றுக்கொள்ளும்படி மக்களை அவரிடத்தில் வழிநடத்துவதுமாகிய மாபெரும் செயல் நோக்கத்திற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒன்று.

இது ஆச்சரியமன்று. உண்மையான எந்த ஒப்புக்கொள்ளுதலும் வெளிப்பட்டாக வேண்டும். உளவியல் கோட்பாட்டின்படி ஓர் உந்துதல், ஓர் ஒப்புக்கொள்ளல், ஒரு குறிக்கோள் ஆகியவை வெளிப்படுத்த மறுக்கப்பட்டால் இறந்துபோகும். கல்வி முறைகளிலே இந்த உண்மை அதிகமதிகமாக ஒப்புக்கொள்ளப்படுவதுடன், பல மாற்றங்களுக்குக் காரணமாக இருப்பது தெரியவருகின்றது.

வெளிப்படுத்தப்பட்டுள்ள மதத்தின் இன்றியமையாத தேவைகளின் பின்னணியில் நிற்பது இதுவே. பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் விஞ்ஞானக் கல்விபுகட்டுபவர்கள்; அவர்கள் கடவுளின் ஆவியினால் வழிநடத்தப்பட்டனர். இஸ்ரவேலரின் எருசலேம் நோக்கிச் செய்த யாத்திரைகள், பெரிய பண்டிகைகள், பலிகள், பெரிய திருக்கூட்டமாக ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியடைந்தது முதலான எல்லாம் அவர்களுடைய நாட்டு உணர்வு, நம்பிக்கை, யெகோவாமீது கொண்டிருந்த பக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தின; இல்லையெனில், அவை ஒடுங்கி மறைந்துவிட்டிருக்கும். தங்களை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த இந்தச் சந்தர்ப்பங்கள் அவர்களுடைய விசுவாசம், பக்தி இவற்றின் நெருப்புகளைத் தூண்டிவிட்டு அணையாமல் காத்துவந்தன. இவைகள் அவர்களுடைய சமயப் பண்பையும் மனசாட்சியையும் நிலைநாட்டிப் பேணி வளர்த்தன; இவ்வாறாக, இஸ்ரவேல் மக்களின் சமய வாழ்க்கையின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் அவைகள் துணைபுரிந்தன.

கிறிஸ்தவ சமயத்தின் கட்டளைகளுக்கும் நிறுவனங்களுக்குங் கூட இவற்றிலே காரணம் அமைந்துள்ளது. கிறிஸ்துவில் நம்பிக்கை பெறுவதற்குரிய வாய்ப்பினையும் அவரை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தூண்டுதலையும், தங்கள் உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தினையும் திருமுழுக்கு ஒருவருக்கு அளிக்கிறது. தனி ஓர் ஆள், தன் அறிவுணர்வுடன் கீழ்ப்படிந்து, தன்னை அடைக்கலமாக்கி ஒரே சமயத்தில் முற்றிலுமாகக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும் ஒரு கட்டம் அது.

விசுவாசிகளின் திருக்கூட்டங்கள், பொதுவான ஆராதனை, ஆராதனையில் மையமான இடம் பெற்றுள்ள ஆண்டவருடைய திரு விருந்து முதலியன இதயத்தின் விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கும் புதிய ஊக்கம் பெறுவதற்கும், கிறிஸ்துவை வாழ்க்கையின் இரட்சக-ராக அறிக்கை செய்வதற்கும் மேன்மைப் படுத்துவதற்கும் பெருந் துணையாக அமைந்துள்ளன. தொடர்ந்து ஊழியம் செய்வதற்குக் கிறிஸ்து மக்களுக்குக் கொடுக்கும் அழைப்பு அவர்களுடைய நம்பிக்கை-யைத் தொடர்ந்து வல்லமை பெறச்செய்வதாகும்.

கிறிஸ்துவின் காரியமாக இவ்வாறு ஒப்புக்கொடுக்க வேண்டியது, 'கிறிஸ்தவன்' என்னும் பெயரின் உட்பொருளில் அமைந்துள்ள மிக அவசியமான ஒரு பகுதியாகும். காரண காரியம் இல்லாமல் நம்பிக்கை உண்டாதல் என்பது அருத்தமற்றது; பயனில்லாதது. கிறிஸ்து வெறுமனே ஒரு கருத்து அல்லர். கிறிஸ்து ஓர் ஆள். அவர் மனித வாழ்க்கைக்குத் தனிப்பட்ட, தலைமையான உறவினை உடையவர். மனித வாழ்க்கையின் தலைமையான அவசரத் தேவை, அவருடன் பொருத்தமாக அமைத்துக் கொள்ள வேண்டியதாகும். கிறிஸ்தவனுடைய தலைமையான வேலை, வாழ்க்கையை ஆண்டு நடத்துவதற்குக் கிறிஸ்து-வுக்குள்ள உரிமையை உலகத்திற்கு அறிவிப்பதும், மனிதர் அந்த உரிமையை ஒப்புக்கொள்ள வேண்டிய்தை உறுதியாக நிலைநாட்ட வேண்டியதுமாகும்.

இயேசுபெருமானின் உண்மையான சீடருக்குக் 'கிறிஸ்தவன்' என்னும் பெயர் இதற்குக் குறைந்த பொருளை ஒருபோதும் தருவதற்கு இயலாது. அது, புதிதாகச் சேர்ந்தவருக்கு, ஒரு புதிய படைவீரருக்கு இருக்கக்கூடிய எல்லா ஆர்வத்திற்கும், படையெடுப்பவருடைய எல்லா ஆவலுக்கும், போர் செய்பவரின் எல்லா உறுதிக்கும், உலகத்தை வெல்பவரின் எல்லாச் சாம்ராச்சிய நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் நிலைக்களனாக நிற்கின்றது. இயேசு கிறிஸ்து அகில உலகத்திற்கும் ஆண்டவர் என்னும் சத்தியத்தை உணர்ந்து ஒப்புக்கொண்டாலன்றி மனித வாழ்க்கையில் அதனுடைய முழுப் பொருளையும் அனுபவிக்க இயலாது.

அகிரிப்பா, பவுல் இவர்களுடைய முன்னிலையில் தன்னை வெளிப்படுத்திக்கொண்ட ஒரு பெரிய பிரச்சனை அது. அகிரிப்பா ஓர் அரசன்; உரோம்ப் பேரரசின் உத்தரவினால் அவன் அந்த அரசாட்சியைப் பெற்றிருந்தான். அவனுக்குள்ளே, பெருமன்னரைச் சார்ந்து ஆட்சி புரியும் உரிமை பெற்றவன் என்னும் நிலையில் இந்த உலக அரசுகளின் வல்லமையும் மகிமையும் பிரதிநிதித்துவம் பூண்டு விளங்கின. வனாந்திரத்திலே சாத்தான் இயேசுவுக்கு முன்னர் வைத்த எல்லாம் இங்கு பவுலுக்கு முன்னர் உடம்பெடுத்துத் தோன்றியது.

பவுல் இவை எல்லாவற்றிற்கும் எதிர்மறையாக நின்றார். இந்த உலகத்தின் வலிமை மிக்க வல்லரசின் ஓர் ஆளுடன் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த ஒரு கவனிக்கப்படாத கைதி அவர். நீண்டநாள்களாக அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தபடியினால் அவர் வெளுத்துக் காணப்பட்டார்; அவர் ஏழ்மையாக ஆடை அணிந்திருந்தார். அவருக்கு அப்பொழுது நண்பர்கள் யாருமில்லை; ஆனால், அவரைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த கனிவில்லாத பகைஞருமே சூழ்ந்திருந்தனர். எனினும், அந்த நேரத்தில் அவர் அரசர் முன்னிலையில் நின்றார். இந்த உலகத்தில் ஆடம்பரத்திற்கும் அதிகாரத்திற்கும் மத்தியில் அவர் நின்றார்; அப்பொழுது இயேசு கிறிஸ்து அரசர் என்று உரிமை கொண்டாடினார். அங்கே அகிரிப்பாவுக்கு எதிராக இயேசு கிறிஸ்து நிற்கிறார். பேரரசருக்கும் பேரரசுக்கும் எதிராக இயேசு நிற்கிறார் பவுல் இயேசு கிறிஸ்துவின் மாவீரனாக நிற்கிறார். நாடகம் சார்ந்த இத்தகைய ஒரு காட்சி எப்போதுமே நடந்ததாகக் கூறவியலாது.

இருப்பினும், அதன் தனிச்சிறப்பான பொருள் 'கிறிஸ்தவன்' என்னும் திருப்பெயரை ஒருவர் அதற்குரிய தகுதியுடன் எந்தக் காலத்தில் அணிந்துகொண்டிருந்தாலும், அவரிலும் அவருடைய போக்கிலும் அமைந்து விளங்குகின்றது. கிறிஸ்துவை உலகத்திற்குரிய வாழ்க்கைக்கு எதிராகவைத்தல்; கிறிஸ்துவை மன்னராக்குவதே கிறிஸ்தவனின் தலைமையான குறிக்கோள்.

இறுதியாக' பவுலின் வாழ்க்கையில் கிறிஸ்தவன் என்னும் திருப்பெயர் ஒரு நடத்தையை விளக்கமாக்குகிறது. இதுதான் அதன் மணிமுடிச் சிறப்பு. வேர், கிளைகளிலும் கனியிலுமிருந்து தோன்றுவது போல, உள்ளத்தில் உணர்ந்து ஒப்புக்கொள்ளுதலும் குறிக்கோளும் நடத்தையில் தோன்றுகின்றன. அவைகளின் வாதப் பொருத்தமுள்ள முடிவு இதுதான்; அவைகளின் புகழுரையும் நடத்தைதான். திரித்துவத்தில் இறுதிச்சொல் அது; புதிய பெயரின் பொருளை அது நிறைவாக்குகிறது.

பேதுரு அந்தச் சொல்லாட்சியில் அழுத்திக் கூறுவது கிறிஸ்தவனின் நடத்தையைத்தான். அந்த வாழ்க்கைக்கு நேர்மாறானது—கொலைகாரன், திருடன், தீயவன். வீணன் என்பன, இவர்கள் கிறிஸ்தவனுடன் போரிடுபவர்கள். இங்கே நடத்தைதான், இந்த ஒப்புமையில் வேறுபட்டுக் காண்கின்றது.

பண்டைய உலகத்திலே கிறிஸ்தவத்தின் தலைமைச் சிறப்பு இங்கேதான் காணப்பட்டது. உலக மக்களின் வாழ்வு பெரும்பாலும் மாமிச இச்சையின் ஆட்சியாக இருந்தது. அதில் தூண்டுதலும் உணர்ச்சியுமே முடிவெடுக்கும் ஆக்கக்கூறுகளாக இருந்தன. யூதனும் "கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்" என்பதைத் தன் கொள்கை முழக்கமாகக் கொண்டிருந்தான்.

இயேசு இன்னொரு உபதேசத்தைக் கற்றுக்கொடுத்தார். அவர் தூய்மையை, தன்னடக்கத்தை, சகோதர மனப்பான்மையை, மன்னிப்பை, அன்பை, தற்பலியை, தியாகத்தை, மற்றவர்களுக்குத் தொண்டு செய்தலைக் கற்பித்தார். மத் 5:38-42. இயேசு போதித்ததை வாழ்ந்து காட்டினார். கிறிஸ்துவினுடைய போதனையைத் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யாத யாரும் இயேசுவின் உண்மையான சீடராக, ஒரு கிறிஸ்தவனாக இருக்கஇயலாது. யார் ஒருவரும் முதலாவது தங்கள் வாழ்க்கையிலே அந்த உபதேசத்தின்படி உத்தமமாகத் தொடர்ந்து முயன்று உறுதியாக நடந்துகொள்ளவில்லை என்றால், அவர்கள் அதனை ஆதரித்து அதற்காகப் போராடி வாழ இயலாது.

மனிதர் அதன்படி வாழ இயலும் என்பதை இயேசு பெருமான் காட்டியுள்ளார். அவர் மக்களைத் தம்முடன் உயிர்நிலையான உறவுகளில் ஏற்றுக்கொண்டார்; மக்களைத் தமக்கு நண்பர்களாக்கினார்; அவர்கள் தமது வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும்படி செய்தார். ஆகையினாலே அவரைப் பின்பற்றினவர்களின் வாழ்க்கையிலே வியக்கத்தக்க ஒரு முழுமையான மாற்றத்தைக் காண்கிறோம். பழைய மனிதன் அவனுடைய இச்சைகளுடன் இருந்த இடம் தெரியாமல் கிறிஸ்துவுடன் மிக நெருக்கமான ஐக்கியத்தில் வாழ்ந்ததனால் இத்தப் பெருமாற்றம் உண்டானது. ஒரு புதிய மனிதன் உருவானான்; அவன் கிறிஸ்து இயேசுவில் கடவுளால் படைக்கப்பட்டவன்.

ஒருகாலத்தில் பலவகையான இச்சைகளுக்கு அடிமைகளாயிருந்து பின்னர் தூய்மையான வாழ்க்கை நடத்திய பலருடைய காட்சியை உலகம் கண்டிருக்கிறது. அருவருப்பானவர்கள்; ஒருவரையொருவர் வெறுக்கின்றவர்கள் என்று நெடுங்காலமாக அறியப்பட்டவர்கள் பின்னர் அன்பில் ஒன்றுபட்டு வாழ்ந்த காட்சியை உலகம் கண்டிருக்கிறது; வேசித்தனம் செய்தவர்களும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும் கொள்ளைக்காரருமாக இருந்தவர்கள் கர்த்தராகிய இயேசுவின் திருப்பெயரினாலும் கடவுளின் ஆவியினாலும் கழுவப்பட்டிருக்கிறார்கள், பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள், நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள், (I கொரி, 6:9–11).

கொரிந்து, அந்தியோகியா, ரோமாபுரி ஆகிய நாடுகளின் சுற்று வட்டாரங்களில் ஒரு புதிய ஒளி பிரகாசித்தது. பாவம் உண்டாக்கிய அழிவிலிருந்தும், கூளங்குப்பையிலிருந்தும் ஒரு புது மாதிரியான ஒழுக்கம் உருவாகி நின்றது. இந்த உலகத்திலே அதற்கு ஒத்தது ஏதும் இல்லை. இத்தகைய புதியதும் பரலோகச் சிறப்புவாய்ந்ததுமான நடத்தையின் தோற்றமூலம் ஒரே ஒருவர்தான். அவர் கிறிஸ்து. இந்த மனிதர்கள் ''கிறிஸ்தவர்கள்.''

பவுலின் வாழ்க்கையிலே ஒரு புரட்சிகரமான மாற்றம் உண்டாயிற்று. அவர் தம்முடைய பழைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்த போது, பாவிகளில் பிரதான பாவியாக அவர் தன்னைக் கண்டார். I தீமோ. 1:15. அவர் பலருடைய பாவங்களைப் பற்றிப் பேசியுள்ளார்; பவுலின் பாவங்கள் அதேமாதிரியானவை அல்ல; ஆனால் அவருடைய பாவங்கள் ஏனையோர் பாவங்களைவிட பிராண பயங்கரமானவை. அவர் ''ஓர் அவிசுவாசியாயிருந்தார்;'' அவிவாசந்தான் எல்லாப் பாவங்களையும் உள்ளடக்கிய பாவம். அவர் ஒரு நிந்தனைக்காரர், கொடுமைக்காரர், துன்புறுத்தியவர், I தீமோ. 1:13.

கர்த்தருடைய சீடர்களுக்கு விரோதமாக அவர் சீறி எழும்பி அவர்களைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினார் அப் 9:1 அவர் ஒரு சக்திவாய்ந்த கொலைகாரர். மத். 5:21.22. அவர் எருசலேமிலிருந்த திருச்சபையைச் சூறையாடினார்; வீடுகளில் நுழைந்து ஆண்களையும் பெண்களையும் இழுத்துச் சிறைச்சாலையில் போட்டார். அப். 8:3 எல்லாச் ஜெபாலயங்களிலும் சீடர்களைப் பலமுறை தண்டனைக்குட்படுத்தினார்; தெய்வநிந்தனையாகப் பேசும்படி கட்டாயப்படுத்தினார். சீடர்களுக்கு விரோதமாக அவர் மூர்க்க வெறிகொண்டிருந்தார்; வெளியூர்களுக்குங்கூடப் போய் அவர்களைத் துன்புறுத்தினார். அப். 26:11.

வெறுப்பும் பழிவாங்குதலும், கொடுமைப்படுத்தலும், கொலைவெறியும் நல்லொழுக்கத்தைப் பாழாக்கும் கொடிய குணங்கள்; ஆம், பவுலின் பழைய வாழ்வு அவர் நினைத்ததுபோல அவ்வளவு கேடானது தான். மாமிச இதயத்தின் இத் தலைமையான தீய குணங்களைத் தவிர, கீழ்த்தரமான உணர்ச்சிகள், அவையும் அழிவுக்கும் வெட்கத்திற்கும் உரியனவாக இருந்தாலும் சற்றுக் குறைவான கொடிய குணங்களே.

இத்தகைய விரும்பத்தகாததும் விலக்கப்பட வேண்டியதுமான வாழ்கைக்கு எதிரில் பவுல் கடவுளின் திருக்குமாரனில் கொண்ட விசுவாசத்தினால் வாழ்ந்த வாழ்க்கையை நாம் வைக்க வேண்டும். அவருடைய இதயத்தின் உள்ளான கிரியைகளைக் குறித்து அவர் நமக்குக் காட்டும் காட்சி எத்தகையது! எத்தகைய வாழ்க்கை வரலாற்றினை அவர் நமக்குச் சொல்லுகின்றார்! கிறிஸ்துவுக்குள்ளே முழுவதுமாக மாற்றம் பெற்ற, புதிதாக அமைக்கப்பெற்ற எத்தகைய ஒரு வாழ்க்கை நடத்தையை அவர் வெளிப்படுத்துகின்றார்.

பவுல் கிறிஸ்துவை "ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு" மேற்கொண்ட விசுவாச வாழ்க்கையின் சுருக்கத்தைக் கவனியுங்கள் "நியாயப் பிரமாணத்தினுல் வருகிற சுயநீதியை உடையவராயிராமல், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினுல் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனுல் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனுயிருந்து கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்.

"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். பிலிப் 3;9. 11. வேறு யார் இவ்வாறு கூற இயலும்? ஒரு சமயத்தில் கிறிஸ்துவில் அவிசுவாசியாயிருந்து, அவரையும் அவருடைய மக்களையும் வெறுத்து வாழ்ந்த மனிதனுடைய வாழ்க்கையிலே உண்டான ஓர் அற்புதமான மாற்றமல்லவா அது?

இந்தப் புதிய வாழ்க்கைக்கு, கிறிஸ்துவைப்போன்ற நடத்தைக்கு அவர் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தீவிரத்தையும் முழுமையையும் விட வேறு யார் ஒப்புக்கொடுத்துள்ளனர்? அதில் அவர் தன்னை மறந்த நிலையில் மூழ்கிக் கிடந்தார். ஒரு விளையாட்டிலே போட்டியிடுபவர்களைப் போல, அவர் தமது உயிரின் கடைசி பெலத்தையும் முயற்சியையும் அதிலே வைத்தார். அவருடைய வாழ்க்கையிலே அது முதலும் முடிவுமான தாக இருந்தது. அவர் செய்ல்பட்டு வந்த ஒரே காரியமாக அது இருந்தது. ..."ஒன்று செய்கிறேன், பின்னுனவைகளை மறந்து முன்னுனவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று அவர் கூறுகின்ருர், பிலிப் 3:13, 14.

பவுலுடைய வாழ்க்கையிலே உண்டான அற்புதமான மாற்றத்தினுலே மக்கள் மீது அவர் கொண்டிருந்த எண்ணத்திலேயும் அருமையான மாற்றம் உண்டானதைக் காண்கிருேம். விசுவாசிகளைக் கொடுமையாகத் துன்புறுத்தி அழித்துக் கொண்டிருந்த மனிதன் இணையில்லாத ஆர்வத்துடன் மக்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வரும் தியாகியாக மாறியதைக் காண்கிருேம். பவுல் கர்த்தருடைய ஊழியத்தினிமித்தம் செய்த தற்பலி ஏராளம்! அவருடைய சகோதாருக்காகவும் இனத்தாருக்காகவும் அவர் தம்முடைய சொந்த நம்பிக்கைகளையே மனமுவந்து பலி கொடுக்க விரும்பினுர். ரோமர் 9:3. அவர் விடுதலைப் பெற்றவராக இருந்த போதிலும், மற்றவர்கள் எல்லோரையும் ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர் தம்மைத் தாமே எல்லாருக்கும் அடிமையாக்கினுர். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானுர். அவர் எல்லா மனிதருக்கும் எல்லாமானுர்; எப்படியாகிலும் சிலரை இரட்சிப்பதற்குரியவர்களாக்க அவர் அப்படியானுர். நற்செய்தியினிமித்தமே அவர் இவை எல்லாவற்றையும் செய்தார்; நற்செய்தியின் உடன்பங்காளியவதற்கு அவர் இவ்வாறு நடந்து கொண்டார். 1 கொரி. 9:19:22.

மற்றவர்களின் துன்பங்களைப் பொருட்படுத்தாத உணர்ச்சியற்ற மனிதனுக் இருந்த ஒருவர் பின்வருமாறு சொல்லுவதைக் கவனியுங்கள்: உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்." 1 தெச. 2:7,8. மற்றவர்களின் மனச்சான்றுகள் மீது வீராப்பான மேலதிகாரம் செலுத்தும் ஓர் ஆள் சொல்லுகிறார்: ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாமிசம் புரியாதிருப்பேன்." 1 கொரி 8:13.

அவர் பின்வருமாறு கூறிய பொழுது சத்தியத்தையே பேசினார் என்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." கலா 2;20. ஒரு கிறிஸ்தவராக வாழ்வதன் முடிவான அருத்தத்தைப் பவுல் இங்கே காண்கிறார்; நமக்குக் காண்பிக்கிறார்.

எப்பொழுதுமே இவ்வாறாகத்தான் இருக்க வேண்டும். 'கிறிஸ்தவன்' என்னும் சொல் அதன் முழுப்பொருளுடன் மக்கள் வாழ்க்கையில் விளங்க வேண்டும் என்றால் பவுல் கூறியது போல் ஒவ்வொருவனுடைய வாழ்க்கையையும் விளங்க வேண்டும். கிறிஸ்துவின் ஒழுக்கம் நம்மிலே திரும்பவும் உண்டாக்கப்படவில்லை என்றால், கிறிஸ்துவின் மார்க்கம் அதனுடைய நேர்மையான முடிவினை அடைய இயலாது இதுதான் கிறிஸ்துவின் மார்க்கம்: அதாவது "கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுதல் (கலா. 4,19.) "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பது." கொலோ 1:27' நாம் இதுகாறும் ஆராய்ந்தவற்றின் பொருளும் அதன் உபயோகமும் இது தான்.

நாம் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்போமானால், அவரையே நமது ஆசிரியராகக் கொண்டு நாம் நாள்தோறும் கற்போனால், மெய்மாகவே இந்தப் பரிபூரண வாழ்க்கையை அடைவதற்கு நாம் கற்றுக் கொள்வோம். கிறிஸ்துவின் காரியமாக நாம் அழைக்கப்பட்டவர்களாக அவருக்காக நாம் போராடுகின்றவர்களாக இருப்போமாயின், நாம் மேலே கண்டவாறு கற்று, ஊழியம் செய்து இந்தப் பரிசுத்தமான போராட்டத்திலே நம்முடைய ஆத்துமாக்கள் ஈடுபடச் செய்வோம். கிறிஸ்துவைப் போன்ற மாதிரியில் கிறிஸ்தவம் வெளிப்படும் வரைக்கும் அது முழுமையாகாது. அவ்வாறு வெளிப்படுங்காலத்தில் நடைமுறை உண்மையில் கிறிஸ்தவன் என்னும் ஒரு மனிதன் இருப்பதைக் காணலாம்.

# முதல் நூற்றுண்டுத் திருச்சபை

வேதாகமத்தில் மார்க்க அளவிலான முப்பெரும் பிரிவுகளைக் காணலாம். ஆதாம் முதல் மோசே வரையிலான சுமார் 2500 வருட காலம், தந்தை வழி மார்க்கம் (Patriarchy) எனவும், மோசே முதல் கிறிஸ்துவின் மரணம் வரையிலான சுமார் 1500 வருடங்கள், நியாயப்பிரமாண வழி மார்க்கம் (Judaism) எனவும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முதல் இன்றுவரை உள்ள காலம், புதிய ஏற்பாட்டு மார்க்கம் (New Testament Christianity) எனவும் நாம் அறிய முடிகின்றது!

தந்தை வழி மார்க்கம் என்பது, குடும்பத் தலைவனின் மூலமாகத் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்திய ஓர் காலமாகும். நியாயப்பிரமாண வழி மார்க்கம் என்பது, யூத மக்களுக்கு மோசேயின் மூலம் தேவன் அளித்த சித்தமாகும். மோசேயும், அவனுக்குப் பின் வருபவர்களும் இம்மார்க்கத்தில் போதகர்களாகத் திகழ்ந்தனர்.

புதிய ஏற்பாட்டு மார்க்கம் என்பது, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட, அதாவது, அவரையே எக்காலத்திலும் ஒரே தலைவரும், போதகருமாக ஏற்றுக் கொண்டிருப்பது!

பக்தி உணர்வோடு, தேவனைத் தேடும் இன்றைய மக்களின் அத்தியாவசியத் தேவை எது?

முதல் நூற்றுண்டு கிறிஸ்துவின் சபை:
CHURCH OF CHRIST

முதல் நூற்றுண்டில் பிரசங்கிக்கப்பட்ட சுவிஷேசம்:
GOSPEL

முதல் நூற்றுண்டுப் புதிய ஏற்பாட்டு மார்க்கம்:
THE WAY

முதல் நூற்றுண்டு சபை கி. பி. 33ல், எருசலேம் நகரில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தேகொஸ்தே பண்டிகையன்று உருவாயிற்று. இதை அப்போஸ்தலர் நடபடிகள் 2:1-4, 14-37,38,39,41,42,43-47 ஆகிய வசனங்களில் காணலாம்.

கிறிஸ்துவின் சபை, உலக அளவிலான ஒரு பொதுவான ஸ்தாபனமாக உருவானதால் குடும்ப அளவிலான, தேச அளவிலான, தந்தை வழி மற்றும் நியாயப் பிரமாண மார்க்கம் முடிந்து போயின என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கிறிஸ்துவின் சபை ஆரம்பமான காலங்களிலே ''கத்தோலிக்கமோ'', ''புரொட்டஸ்டென்ட் சபைப் பிரிவுகளோ'' அல்லது முஸ்லீம் மதமோ இல்லை. கிறிஸ்துவின் சபை என்பது ஓர் மார்க்கப் பிரிவினைக் கூட்டமல்ல! அப்படிப்பட்ட பிரிவினை மார்க்கங்கள் குழப்பத்தை விளைவிப்பதற்காக தோற்றுவிக்கப்படு முன்பே கிறிஸ்துவின் சபை உருவாகிவிட்டது. கிறிஸ்துவின் சபை என்பது ஓர் வித்தியாசமான சபை மட்டுமல்ல; இவ்வுலகம் தன் சுய ஞானத்தினுல் கண்டிராத மேலான சபையாகும்!

எக்காலத்திலும், இயேசுகிறிஸ்து மட்டுமே இதன் தலைவராகவும், இரட்சகராகவும், அஸ்திபாரமாகவும் இருந்து கொண்டிருக்கிருர் (எபே 5:25). எனவே, இயேசு கிறிஸ்துவால் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட மக்கள் மட்டுமே இதில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் (அப் 2:47).

முதல் நூற்ருண்டில் பிரசங்கிக்கப்பட்ட, அதே சுவிஷேசத்தையே இன்றும் பிரசங்கிக்க வேண்டும் என்பது கிறிஸ்துவின் கட்டளையாகும். (மத் 28:18-20. மாற்கு 16:15, 16.) தேவன், நோவாவின் காலம் முதல் இன்றைய காலம் வரை தம்முடைய செய்தியை மனுக்குலத்திற்குப் பிரசங்கத்தின் மூலமே அனுப்பி வருகின்ருர். அப்படிப்பட்ட செய்திகள் ஆரம்பம் முதலே, மக்களைப் பாவ வெள்ளத்தினின்று கரையேற்றி வருகின்றன (அப் 2:36-41;4:4; 5:14ல் இஸ்ரவேலர், (அப் 8:4-13ல் சமாரியர், அப் 8:26–40ல் எத்தியோப்பிய மந்திரி அப் 9:17-18ல் சவுல் அப் 10:34 48ல் கொர்நேலியு, அப் 16:14,15ல் லீதியாள், அப் 16:30-34ல் பிலிப்பிய சிறைச்சாலைக்காரன், அப் 18:1-4ல் கொரிந்து பட்டண மக்கள், அப் 19:1-12ல் எபேசு பட்டண மக்கள்)

ஆனுல், இவை சுலபமான பிரசங்கங்களால் நிகழவில்லை தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது, தேவனுக்காகத் தம்மை தியாகம் செய்த அப்போஸ்தலர்களால் நிகழ்ந்தவையாகும்.

எனவே, அன்றைக்கு, முதல் நூற்ருண்டில் பிரசங்கிக்கப்பட்ட அதே சுவிஷேசத்தை, அப்பழுக்கில்லாமல் நாம் பிரசங்கித்தால், இன்றைகதும் முதல் நூற்ருண்டில் இருந்த அதே சபையை, மார்க்கத்தை மீட்டு, நிலைபெறச் செய்ய முடியும்.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00 to 9:15 P. M.
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00 to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays-2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays 3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

ஜெபியுங்கள்! பங்கு கொள்ளுங்கள்!!

## பரிசுத்த ஆவியானவர் பற்றிய

# சிறப்புப் பயிற்சியின் நிறைவு விழா.

**இடம்: 2, மணல்மேடுவீதி, ஈரோடு-638002.**

**(கிறிஸ்துவின் சபை கூடும் இடம்)**

**நாள்: 28—5—89 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: இரவு 7-00 மணி**

பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுவதைக் காணவாரீர்.

உங்கள் ஜெபத்தையும் நல்வரவையும்

எதிர்நோக்கும்,

**கிறிஸ்துவின் சபையார், ஈரோடு-638002.**

எமது அடுத்த சிறப்புப் பயிற்சி 'இயேசுவின் வாழ்க்கை வரலாறு' பதிவு செய்ய விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்க.

Published by Church of chirst and Printed bySri. vela E.V. Rajamanickam
at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

POST BOX NO 238

NEW DELHI

110049

If undelivered please return to;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.